# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024

Prosecution Witness -P.W. 7

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வகுமார் |
| Father's Name | : | C. Ramalingom |
| Village | : | Vadasery |
| Taluk | : | Agasteeswaram |
| Caste | : | Saliyar |
| Calling | : | Teacher |
| Religion | : | Hindu |
| Age | : | 58 |
| Date | : | 12.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2024

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர். )

12.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது வடசேரியில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் SMRV மேல்நிலைப் பள்ளியில் PG Assistant மற்றும் NSS Program Officer ஆக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 29.08.2023 அன்று போதை விழிப்புணர்வு சம்பந்தமாக கிருஷ்ணன் கோவில் போலீஸ் நிலையத்தில் ஆய்வாளர் திருமுருகனை சந்தித்தேன். அப்போது காலை 10.00 மணி இருக்கும். அந்த சமயத்தில் பேச்சி என்கிற இசக்கி முத்து, மனோஜ் என்பவரை கொலை செய்ததாக தெரியவந்தது.

அப்போது ஆஜர் எதிரி பேச்சி என்கிற இசக்கி முத்து என் முன்னரும், உதயகுமார் முன்னரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த உதயகுமார் போலீஸ் நிலையத்தில் துப்புரவு வேலை செய்பவர். ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் பயன்படுத்திய Dio பைக் காவல் நிலையத்திற்கு வெளியே நிறுத்தியிருப்பதாக சொன்னார். பச்சை நிற ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்தியை வடசேரி ஆராட்டு ரோடு பக்கத்தில் உள்ள ரயில்வே கேட் பக்கத்தில் வடக்கு பக்கத்தில் 50 அடி தூரத்தில் மறைத்து வைத்துள்ளதாகவும் தன்னை அழைத்துச் சென்றால் எடுத்து தருவதாக சொன்னார். அதை லேப்டாப் ல் டைப் செய்து என்னிடமும், உதயகுமாரிடமும் கையொப்பம் பெற்றார். அதன்பிறகு நாங்கள் இருவரும் வெளியே வந்து காவல் ஆய்வாளர் முன்னிலையில் Dio வண்டியை பேச்சி முத்து அடையாளம் காட்டி கைப்பற்றினார். அத்தாட்சி தயார் செய்தார்கள். நானும், உதயகுமாரும் கையொப்பம் செய்தோம். ஜீப் ல் என்னையும், உதயகுமார், இசக்கிமுத்து ஆகியோரை காவல் ஆய்வாளர் எதிரி சொன்ன ரயில்வே கேட் அருகே கூட்டிச் சென்றார். ஒரு 50 அடி தூரம் வடக்கு புறம் சென்று அங்கிருந்த முட்புதரிலிருந்து மறைத்து வைத்திருந்த பச்சை நிற ஸ்கூரு டிரைவரையும், கத்தியையும் எதிரி பேச்சி என்ற இசக்கி முத்து எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தார். அதை அத்தாட்சியில் கைப்பற்றினார். நானும், உதயகுமாரும் அந்த அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம். பைக் கைப்பற்றும்போது பகல் சுமார் 11.30 மணி இருக்கும். ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்தியை கைப்பற்றும்போது பகல் 11.50 இருக்கும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் உதயகுமாருடையது. முதல் கையொப்பம் அ.சாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் உதயகுமாருடையது. அந்த அத்தாட்சி அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யபடுகிறது. என்னிடம் காட்டப்படும் மற்றொரு அத்தாட்சியில் உள்ள முதல்

கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் உதயகுமாருடையது. அந்த அத்தாட்சி அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 மற்றும் 2 அப்போது கைப்பற்றப்பட்ட ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்தி தான். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 3 பைக் அப்போது கைப்பற்றப்பட்டது தான். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)-

நான் வேலை செய்த பள்ளிக்கூடத்தில் எனக்கு வேலை நேரம் என்ன என்றால் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை. காலை 9.00 மணிக்கு பள்ளிக்கூடம் செல்லும்போது வருகைப்பதிவேட்டில் கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். வருகைப் பதிவேட்டை சரி செய்வது பள்ளியின் தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பள்ளிக்கூடம் சென்றேனா என்றால் சென்றேன். அன்றைய தினம் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே வருவது என்றால் அனுமதி கடிதம் எழுதி கொடுத்தோ அல்லது Movement Register ல் கையொப்பம் செய்து தான் வெளியே வர முடியும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்தேன் என்றோ Movement Register ல் கையொப்பம் செய்தேன் என்றோ கூறவில்லை என்றால் சரிதான். போதை ஒழிப்பு விழிப்புணர்வு தொடர்பாக நான் போலீஸ் நிலையம் சென்றதாக காட்டுவதற்கு நானோ, எங்கள் பள்ளிக்கூடமோ போலீசாரிடம் எந்த ஆவணமும் கொடுத்தோமா என்றால் இல்லை. நான் சொல்வது போல போலீஸ் நிலையத்திற்கு அன்றை தினம் செல்லவில்லை என்றாலும் நான் கூறுவது போல கையொப்பம் செய்யவில்லை என்றாலும் என் முன்னர் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 வரையில் பள்ளிக்கூடத்தில் தான் வேலையில் இருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் அனுமதி வாங்கி விட்டு சென்றேன்.

அவ்வாறு அனுமதி வாங்கி போலீஸ் நிலையம் சென்றதாக தற்போது தான் முதல் முறையாக சொல்கிறேன் என்றாலும் போலீசார் விசாரணையில் அது குறித்து சொல்லவில்லை என்றாலும் சரிதான். ஆராட்டு ரோடு ரயில்வே கேட்டிற்கு ஜீப் ல் நானும், உதயகுமாரும், எதிரியும் சென்றதாக தற்போது தான் முதல் முறையாக சொல்கிறேன் என்றாலும் போலீசார் விசாரணையில் கூறுவில்லை என்றாலும் சரிதான். ஆராட்டு ரயில்வே கேட் வடசேரி காவல் நிலையத்திலிருந்து எந்த திசையில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் இருந்து கிழக்கே பார்த்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. நான் சொல்வது போல காவல் நிலையத்திலிருந்து கிழக்கே ஆராட்டு ரயில்வே கேட் இல்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பே எதிரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். அவர் எப்போது காவல் நிலையத்திற்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரியை அதற்கு முன்போ பின்போ எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி காவல் நிலையத்திற்கு எப்போது வந்தார் எதிரியை அடித்து கொடுமைப்படுத்தப்பட்டாரா அவருக்கு எதாவது காயம் ஏற்ப்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் நான் போவதற்கு முன்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. பொதுவாக காவல் நிலையத்தில் ஒருவரை பிடித்தால் அடித்து கொடுமைப்படுத்துவது வழக்கம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பே கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் Dio பைக் காவல் நிலைய வளாகத்தில் நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். அந்த பைக் எப்போது காவல் நிலையத்திற்குள் வந்தது யார் கொண்டு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் செய்ததாக சொல்லும் மூன்று கையொப்பமும் காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதின் பெயரில் செய்து கொடுத்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 5 கையொப்பம் அந்த ஆவணத்தின் தட்டச்சு செய்யப்பட்ட பகுதியிலிருந்து சுமார் 10 வரிகள் இடைவெளி விட்டு உள்ளது என்றால்

சரிதான். அது நான் வெற்றுத்தாளில் பெறப்பட்ட கையொப்பம் என்றால் சரியல்ல. அதில் பொய்யான சங்கதிகளை போலீசார் பிறகு தட்டச்சு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆராட்டு ரயில்வே ரோடு பக்கத்தில் உள்ள ரயில்வே கேட்டுக்கு வடக்கு பக்கம் 50 அடி தொலைவில் ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்தியும் கைப்பற்றப்பட்டதாக தற்போது தான் முதல் முறையாக கூறுகிறேன் என்றாலும் போலீசார் விசாரிக்கும்போது அவ்வாறு கூறவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடன் கையொப்பம் செய்த உதயகுமார் என்பவர் காவல் நிலையத்தில் துப்புரவு தொழிலாளி என போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் இல்லை. ஆனால் அவர் அங்கு துப்புரவு தொழிலாளிதான். வழக்கின் சாட்சி ராஜ கோபாலுடன் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தனியாக தான் வந்தேன். நான் சொன்ன நேரத்தில், எந்த காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றாலும் என் முன்னர் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த ஒரு கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.